# ஆய்வு அறிமுகம்

# ஆய்வு அறிமுகம்

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு அளவிடற்கரியது. மேலை நாட்டுக் கிறிஸ்தவ அருட்பணியாளர்களின் படைப்புகளுக்கு இணையாக நம் நாட்டுக் கிறிஸ்தவர்களின் படைப்புகளும் சிறந்து விளங்குகின்றன. பல இலக்கியங்கள் அச்சுக்கு வராமலும், கவனிப்பாரில்லாமலும் அழிந்து போயின. வெளிவந்துள்ள படைப்புகளுள் ஏராளமானவை கிடைக்கப்பெறவில்லை. கிடைக்கப்பெற்றனவும் மக்களைச் சென்றடையவில்லை. பிற இலக்கியத்தரம் வாய்ந்த நூற்களைப் போல கிறிஸ்தவப் படைப்பாளர்களின் படைப்புகளும் இலக்கியத் தரம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இந்தச் சிறந்த படைப்புகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அவற்றின் முழு இலக்கியப் பயனையும் உணரவைப்பது இன்றையத் தேவையாகும்.

மக்களிடம் அதிகமாய்ச் சென்று சேராத நூற்றுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஆய்வாளரால் சேகரிக்கப்பட்ட கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்களின் இலக்கிய நோக்கு குறித்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வுத் தலைப்பு

தமிழில் கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் ஓர் ஆய்வு என்பது ஆய்வுத் தலைப்பாக அமைகின்றது.

## ஆய்வுப் பொருள்

கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்களைத் தமிழ் இலக்கிய உலகிற்கு நன்முறையில் அறிமுகம் செய்வது ஆய்வுப் பொருளாக அமைகின்றது.

## ஆய்வின் நோக்கம்

கிடைக்கப்பெற்ற கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்களை முழுமையாகத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்வதும், இலக்கியப் படைப்பின் தனித்தன்மைகளைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ளச் செய்வதும், இலக்கிய நயங்களை வெளிக்கொணர்வதும் இவ்வாய்வின் அடிப்படை நோக்கங்களாக அமைகின்றன.

## கருதுகோள்

கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் திருமறை விளக்கங்களாகவும், சமுதாயச் சீர்திருத்த இலக்கியங்களாகவும், பக்திச் சுவையும், புதுமை அமைப்பும் கொண்டனவாகவும், கிறிஸ்தவ இறையியல் சிந்தனையாளர்களுக்கு வழிகாட்டிகளாகவும் அமைகின்றன.

## ஆதாரங்கள்

ஆய்விற்கு உதவிய ஆதாரங்கள் முதன்மை ஆதாரங்கள், துணை ஆதாரங்கள் எனப் பகுக்கப்பட்டுள்ளன.

## முதன்மை ஆதாரங்கள்

கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்களுள் ஆய்வாளருக்குக் கிடைத்த சிற்றிலக்கிய நூற்கள் ஆய்வின் முதன்மை ஆதாரங்களாகும்.

## துணை ஆதாரங்கள்

கிறிஸ்தவ இலக்கியங்கள் தொடர்பான ஆய்வு நூற்கள், இலக்கிய ஆய்வு நூற்கள், கட்டுரைகள், செய்திகள் மற்றும் இதர நூற்கள் துணை ஆதாரங்களாக அமைகின்றன.

## ஆய்வு அணுகுமுறை

பகுப்பாய்வு மூலம் செய்திகள் நிரல்படுத்தப்பட்டு, சமூகவியல் அணுகுமுறையிலும், விளக்கமுறை அணுகுமுறையிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மொழி நடை

எளிய தமிழ் நடையில் இவ்வாய்வு அமைந்துள்ளது. விளக்கம் தேவைப்படும் இடங்களில் செய்யுட்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. நூலாசிரியர் பெயர்கள் எவ்வித மாற்றங்களுக்கும் உட்படுத்தப்படாமல் அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வின் அடிப்படை நூற்கள்

இவ்வாய்வுக்கு அடிப்படை நூற்களாக ஐம்பதுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவச் சிற்றிலக்கிய நூற்கள் இடம்பெறுகின்றன.

## ஆய்வின் எல்லை

தமிழில் கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, விளக்கமுறும் கருத்துக்கள், பக்தி மேம்பாடு ஆகியன ஆய்வின் எல்லையாகப் பின்பற்றப்படுகிறது.

## ஆய்வேட்டின் அமைப்பு

'தமிழில் கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் - ஓர் ஆய்வு' என்னும் இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களைக் கொண்டு அமைகிறது.

### இயல் : 1

'தமிழில் சிற்றிலக்கியங்கள்' என்பது முதலாவது இயலாகும். இவ்வியலில் பிரபந்தங்களின் தோற்றம், வளர்ச்சி, அவைகளுக்குரிய விளக்கங்கள், பிரபந்தம் தொண்ணுற்றாறு என்பதன் விளக்கம், பிரபந்தம் என்னும் சொல் சிற்றிலக்கியம் என மாற்றம் பெறுதல் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### இயல் : 2

'கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள்' என்பது இரண்டாவது இயலாகும். இவ்வியலில் கிறிஸ்தவச் சமயக் கருத்துக்களை வலியுறுத்தும் நோக்கில் படைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் சமயக் கோட்பாடுகளை வெளிப்படுத்தும் விதம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இயல் : 3**

'இலக்கிய நயம்' என்பது மூன்றாவது இயலாகும். இவ்வியலில் கற்பனை வளம், வருணனைத்திறன், கவிதை நலம், ஆசிரியரின் படைப்பாற்றல் போன்ற இலக்கிய நயங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இயல் : 4**

'தனித்தன்மைகள்' என்பது நான்காவது இயலாகும். கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்கள் பிற சமய சிற்றிலக்கியப் படைப்புகளிலிருந்து எவ்வகையில் வேறுபட்டு தனித்தன்மையுடன் திகழ்கின்றன என்பது குறித்த ஆய்வு இவ்வியலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**முடிவுரை**

ஆய்வில் கண்டறிந்த உண்மைகள் முடிவுரையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மேலும் மேலாய்வுக்கு உரிய களன்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு**

1. . கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்களாகத் தெரியவருபவை.

2. துணை நூற் பட்டியல்